தி.மு.க. பொறியாளர் அணி செயலி - புத்தகம் வெளியீடு!

பொறியாளர் அணி சார்பில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் – பரிசளித்து விழாப் பேருரை!

திருவண்ணாமலை, ஆக. 25 -

தி.மு.க. தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒவ்வொரு அணிகளுக்கும் ஒரு பணியை வழங்கினார். அதன்படி தி.மு.க. பொறியாளர் அணிக்கு மாநிலம் முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி நடத்தி அதன் இறுதி விழாவை சென்னையில் நடைபெறவேண்டும் என உறுதி செய்யப்பட்டது. தலைவர் ஆணையை ஏற்று தி.மு.க. பொறியாளர் அணி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் அப்போட்டி நடத்தப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டு சுமார் 200 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மண்டல வாரியாக அரை இறுதி போட்டியினை மிக பிரம்மாண்டமாக பல்லாயிரக் கணக்கான பொறியியல் மாணவர்கள் முன்னிலையில் நடத்தி அதில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 26 மாணவர்களுக்கு இன்று (25ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் சென்னை கலைவாணர் அரங்கில் இறுதி போட்டி நடைபெறவுள்ளது.

இதனை தொடர்ந்து தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா இன்று (25.08.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற உள்ளது. இதில் பொறியாளர் அணி செயலி மற்றும் செயல் திட்ட வெளியீட்டு விழா, எஸ்.கே.பி.கருணா எழுதிய "கலைஞர் கட்டிய தமிழ்நாடு" புத்தக வெளியீட்டு விழா, மாநில அளவில் பேச்சுப்போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா ஆகியவை நடைபெற உள்ளது.

காலை 10 மணியளவில அனைத்து மண்டலங்களிலும் பேச்சுப்போட்டியில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கான இறுதி போட்டி நடக்கிறது. நிகழ்ச்சிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை தாங்குகிறார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை எம்.பி. தயாநிதிமாறன். இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் பரிசளித்து வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளரும், சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) தலைவர் நே.சிற்றரசு, சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

தொடர்ந்து மாலையில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு கழக துணை பொதுச் செயலாளரும், உயர் கல்வித்துறை அமைச்சருமான க.பொன்முடி தலைமை தாங்குகிறார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலை வகிக்கிறார். கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. "கலைஞர் கட்டிய தமிழ்நாடு" புத்தக அறிமுக உரையாற்றுகிறார்.

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறியாளர் அணி செயலி மற்றும் புத்தகத்தை வெளியிட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து விழா பேருரையாற்றுகிறார்.

இதில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கோவை வடக்கு மாவட்டம் அன்னூர் வடக்கு ஒன்றியம் அக்கரை செங்கப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட வாக்கனாங்கொம்பு பகுதியில் மாற்றுத்திறனாளிகளுக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா நலத்திட்ட உதவிகளை வழங்கினார், கழக நிர்வாகி நவீன்ராஜ் சுப்ரமணியம் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில் பா.அருண்குமார், காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ் எம் டி. கல்யாணசுந்தரம், மேற்கு ஒன்றிய செயலாளர் சுரேந்திரன், கோவை கூடலூர் நகர மன்றத் தலைவர் அறிவரசு, காரமடை நகர செயலாளர் வெங்கடேஷ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அம்பாள் நந்தகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அக்கிம், சிறுமுகை ரியாஸ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்,

அறந்தாங்கி நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி - தலைமை வகித்து சிறப்புரை!

புதுக்கோட்டை, ஆக.25-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் நகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழகம் முழுவதும் உள்ள கழக உறுப்பினர்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட அறந்தாங்கி நகரக் கழகம் சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், தலைவர் தளபதி அவர்கள் கழக உறுப்பினர்கள் மீதான மிகுந்த அக்கறையுடன் செயலாற்றி வருகிறார். உறுப்பினர்கள் தங்களது குறைகளை, கோரிக்கைகளைத் தெரிவித்தால், அது உடனடியாக தீர்த்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, எனவே கழக உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளை தெரிவிக்க வேண்டும். இந்தியாவிலேயே எந்த நேரத்திலும் தேர்தல் வைத்தாலும் அதை உடனடியாக எதிர்கொள்ள.தயாராக உள்ள கட்சி தி.மு.க.தான், ஒரு இலக்கை நிர்ணயித்தால் அந்த இலக்கை அடையக் கூடிய சக்தி தி.மு.க.விற்கு மட்டும் தான் உண்டு, பாராளுமன்ற தேர்தலில் 40க்கும் 40 ஐ வெற்றி பெற்றது போல், 2026ல் 200க்கு 200 எடுப்பது உறுதி, ஏனெனில் 234ல், 30வது எதிர்க்கட்சியினருக்கு கிடைத்தால்தான் சட்டமன்றத்தில் கலகலப்பாக இருக்கும், அப்போது தான் எதிர்க்கட்சியினரை ஹீரோவாக உட்கார வைத்து ஜீரோ வாக்க முடியும் என்றார். தி.மு.க. சொந்தக்காலில் நிற்கும் கட்சி, அ.தி.மு.க.தான் அடுத்தவர்கள் அனுப்புகின்ற பொருட்களுக்கு ஜெ யலலிதாவின் ஸ்டிக்கரை ஒட்டும், தி.மு.க.வின் சாதனை களை, திட்டங்களை மற்ற மாநிலங்கள், நாடுகள் பின்பற்றுகின்றன. அந்த அளவிற்கு தலைவர் தளபதியின் ஆட்சி இந்தியாவிற்கே முன்னோடி ஆட்சியாக திகழ்கிறது என்று கூறினார்.

இதே போன்று அறந்தாங்கி தெற்கு ஒன்றியம் சார்பில் நாகுடியில் பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில தேர்தல் பணிக்குழுச் செயலாளர் பரணி இ.ஏ.கார்த்திகேயன், நகர்மன்ற தலைவர் இரா.ஆனந்த், நகர செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் சக்திராமசாமி, பொன்.கணேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த. மணிராஜன்,

அறந்தாங்கி நகர்மன்ற துணைத் தலைவர் தி.முத்து, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஹரி.விமலாதிராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமா பீவி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட, நகர,வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், உள்ளாட்சி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று அறந்தாங்கி நூர் மஹாலில் நடைபெற்ற புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகம் அறந்தாங்கி நகர கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு கழக பொது உறுப்பினர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து சிறப்புரையாற்றினார்.

உடன் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் பரணி கார்த்திகேயன்,அறந்தாங்கி நகர செயலாளர்கள் க.இராஜேந்திரன், அறந்தாங்கி நகர்மன்ற தலைவர் ஆனந்த், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், அறந்தாங்கி நகர் மன்ற துணை தலைவர் தி.முத்து, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஹரி.விமலாதி ராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமா பீவி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட, நகர,வட்ட கழக நிர்வாகி கள், பாக முகவர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூத்தாநல்லூர் நகரக் கழகம் சார்பில்

கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவு மாபெரும் சிறப்பு பாட்டுமன்றம்!

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமை!

திருவாரூர்,ஆக. 25-

கூத்தாநல்லூர் நகர திமுக சார்பில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு சிந்தனை நகைச் சுவை இன்னிசை பாட்டு இன்று (25.08.2024-ஞாயிறு) மாலை 5.00 மணிக்கு நடைபெறுகிறது. நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி, நகர நிர்வாகிகளுடன் இணைந்து விழா ஏற்பாடுகளை செய்கிறார்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்வுகள் கலைஞர் அவர்களின் சொந்த மாவட்டமான திருவாரூரில் எழுச்சியோடு நடத்தப்பட்டு வருகிறது. கூததாநல்லூர் நகர கழகம் சார்பில் நடைபெறும் கலைஞர் நூற்றாண்டு நிறைவு சிறப்பு சிந்தனை நகைச் சுவை இன்னிசை பாட்டு மன்றம், இன்று (25.08.2024-ஞாயிறு) மாலை 5.00 மணிக்கு, கூத்தாநல்லூர் செல்வி மகாலில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்த திட்டங்களையும், திராவிட மாடலையும் முழுமை யாக பயன்படுத்துவது "உழைக்கும் ஆண்களா?" "பொறுப்பான பெண்களா?"என்கிற தலைப்பில் நகைச் சுவை நாவலர்,பல்சுவை வித்தகர் டாக்டர். அபு அவர்கள் நடுவராக இருக்கும் பட்டிமன்றத்தில் , "உழைக்கும் ஆண்களே" எனும் தலைப்பில் கீரை.பிரபாகரன், நடிகை சேலம்.ஐஸ்வர்யா ஆகியோரும், "பொறுப்புள்ள பெண்களே" என்கிற தலைப்பில் மணப்பாறை.லலிதா , பட்டுக்கோட்டை.சாதனா ஆகியோரும் பேசுகின்றனர்.

நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,வார்டு மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், மேலமைப்பு பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்கவிருக்கின்றனர்.